67

பச்சைக்கிளியும் காந்தியவாதியும்

அக்கா கல்யாணம் முடிந்த கையோடு, என் கல்யாணத்தையும் நடத்திவிடுவது என்று அப்பா தீர்மானித்து விட்டார்.

அக்கா கல்யாணத்தின்போது அம்மா நிறைய பட்டுப் புடைவைகள் வாங்கியிருந்தாள். தன் பழைய வைரக் கம்மலை அக்காவுக்குப் போட்டுவிட்டு, புதுசாக தனக்கென்று 'அபூர்வமான' வைரக்கம்மல் வாங்கிக் கொண்டாள். ஆக, வீட்டுக்குள் அவளால் எப்படி இருக்க முடியும்? நாலு வீடுகளுக்கும் நாலு ஊர்களுக்கும் போய், புதுசாய் அவள் வாங்கியிருக்கிற புடைவைகள், கம்மல்கள் இவற்றை மற்ற பெண்களுக்கும் காட்டி, அவர்களின் வயிற்றெரிச் சலைக் கிளம்பினால்தானே அவளுக்கு ஆறுதலாய் இருக்கும்? இல்லையென்றால் அவள் தலைவெடித்துவிடும்!

பெண்ணுக்குக் கல்யாணம் நடத்தி அலுத்துப் போயிருந்தார் அப்பா. அவருக்கு ஒரு வேடிக்கை தேவைப்பட்டிருக்கும் நியாயம் தானே! தவிரவும், பெண்ணைப் பெற்றவராக மாப்பிள்ளை, சம்பந்திக்கு முன் வளைந்து — நெளிந்து — குழைந்து எப்படி யெல்லாம் அப்பா அவஸ்தைப் பட்டார்! தனக்கும் பிள்ளை உண்டு, தானும் பிள்ளையோட தகப்பனார் என்கிற ஹோதாவில் பெண் ணைப் பெற்றவரை நடுநடுங்கச் செய்ய வேண்டும் என்கிற ஆசை அப்பாவுக்கும் இருக்காதா? அப்பாவும் மனிதர்தானே!

ஓர் உல்லாசப் பயணம் போல நாங்கள் பெண் பார்க்கப் புறப்பட்டோம். அப்பா — அம்மா, நான் அடங்கிய கோஷ்டியை தலைமை தாங்கி நடத்திச் சென்றார் நாயுடு. அவ்ரை நீங்கள் அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். நாயுடு எங்கள் தாலுகாவில் புஷ்பவதிகளாகி வீட்டுக்குள் இருக்கிற அத்தனைப் பெண்களின் விவரங்களையும் விரல் முனையில் வைத்திருப்பவர்! அவரைத்

தரகர் என்பார்கள். ஆனால் அவரை 'திருமணக் கலைக்களஞ்சியம்' என்று சொல்வதே பொருத்தம்.

நாயுடு சொன்னார்: 'பொண்ணு பச்சைக்கிளி! பழுது சொல்லவே முடியாது. கோயில் சிலை தோத்துடும் அண்ணா! நீங்கதான் பார்க்கப் போறீங்களே, நான் சொல்றது மெய்யா பொய்யான்னு அப்பத்தான் தெரியும். பொண்ணோட அப்பனுக்கு சொத்து பல லகரத்தைத் தாண்டும், வீராணம் ஏரியை ஒட்டி சும்மா ஒரே தாக்கலா நூறு வேலி. கேக்கணுமா? பொண்ணு பச்சைக்கிளி!

நாங்கள் பச்சைக்கிளியைப் பார்க்கத்தான் போய்க் கொண்டிருந்தோம். காலை பத்துப் பதினோரு மணி அளவில் வீடு போய்ச் சேர்ந்தோம். மிகப் பெரிய வீடு. இரண்டு கைத்தாழ்வாரம். இரண்டு கட்டு வீடு. கூடம் நிறைய நெல் மூட்டைகளும், மிளகாய் வற்றல்களும் அடுக்கி வைக்கப்பட்ருந்தன. அவ்வளவு பெரிய வீட்டில் உட்கார நாற்காலிகள்தான் இல்லை. பட்டு ஜமுக்காளம் விரித்து எங்களை உட்கார வைத்தார்கள். பெண்கள் கூடம், அறைவாயில், சமையல் அறை, தோட்டம் முதலான பல இடங்களிலிருந்தும் கண்களால் என்னை மொய்த்தார்கள். என் ஒவ்வோர் அசைவும் பெண்களால் ஆராயப்படுகிறது என்கிற உணர்வு எனக்கு மேலும் கூச்சத்தைக் கொடுக்க, நான் நெளிந்தேன்.

எதனாலும் பாதிக்கப்படாமல், 'தேமே' என்று இருப்பவன் போன்ற பாவத்தை உருவாக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். அதுவே ஓர் அசட்டுக் களையை எனக்குத் தந்து, என் மேலேயே எனக்குக் கோபம் உண்டாகி எப்போது வெளியேறப் போகிறோம் என்று இருந்தது. இருந்தும், பெரியவர்கள் பேச்சை ரொம்ப சிரத்தையாகக் கேட்பவன்போல் ஒரு பாவனையை மேற்கொண்டேன். மின்விசிறி இல்லாமல், எனக்கு உடல் வியர்த்தது. சட்டைக்குள் 'உஸ்' என்று வாயால் ஊதிக் கொண்டேன், அடுத்த கணம் என் முன் பனையோலை விசிறி ஒன்று வந்து விழுந்தது. 'படக்' கென்று பாய்ந்து அப்பா அந்த விசிறியை எடுத்துத் தமக்கு விசிறிக் கொண்டார். சுகமான காற்றை அனுபவித்தார். பிறகு நாயுடுவைப் பார்த்து, 'நாயுடு, ஆயிரம் ஃபேன் வரட்டுமே! இந்த பனை ஓலை விசிறிக்கு அதெல்லாம் ஈடாகுமா? நம்ம கிராமத்து ஜனங்களோட எளிமை இருக்கே, அடடா...' என்றார். சொல்லி விட்டு, 'என்ன நான் சொல்றது...' என்று கேட்டார். நாயுடு உடனே, 'அண்ணா சொல்றது அனுபவ வார்த்தை ஆச்சே, பிசகு இருக்குமா?' என்றார். நாயுடு — கையில் தாளம் இல்லாத திருஞானசம்பந்தர்.

அந்த நேரத்தில்தான் பெண்ணுக்குத் தந்தை அரக்கப்பரக்க வந்து சேர்ந்தார். எங்களை வரவேற்றுவிட்டு, தாமதத்துக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டார். அப்பாவும் பெரிய மனது பண்ணி அவரை மன்னித்தார்.

உள்ளிருந்து மோர் வந்தது — பட்டணம் படி அளவுக்கு பெரிய பெரிய செம்பு தம்ளர்களில் மோர் வந்தது. கெட்டி மோர். அப்பா சர்ரென்று சப்தம் எழ உறிஞ்சிக் குடித்தார். பிறகு சொன்னார்: 'ரொம்ப நாளுக்குப் பின்னால் இன்னைக்குத்தான் அசல் மோர் சாப்பிட்டிருக்கேன். நாயுடு... இயற்கையா பசும் புல்லை மேஞ்சி, பருத்திக் கொட்டையும் புண்ணாக்கும் திங்கற மாட்டுக்குத் தான்யா இந்த மாதிரி பாலும் மோரும். சும்மா கலர் கலரா போஸ்டர் திண்ணுட்டு, நீராகாரம் மாதிரி பால் கறக்கிற டவுன் மாட்டுப் பால்ல ருசி, வான்னாகூட வராதே! என்ன நான் சொல்றது?"

'ரொம்ப சரி. அண்ணா வார்த்தை அனுபவ வார்த்தை ஆச்சே. பிசகுமா?' என்றார் நாயுடு.

'இது நம்ம வீட்டு மோருங்க. பால் தயிர் மோரு, நெய்க்குன்னே மூணு சீமைக் கன்றுகளை வாங்கி கொல்லையில கட்டி வச்சிருக்கேன். நமக்கு விலைக்கு வாங்கிக் கட்டுப்படியாவுங்களா? வாய்க்குதான் ருசிப்படுமா?" என்றார் பெண்ணுக்குத் தந்தை.

'உள்ளது... உள்ளது. வீட்டு மோருன்னு வாசனையே சொல் லுதே... தயிர் கெட்டுது போங்க!' என்றார் அப்பா. உள்ளே அடுக் களைக்குள் பெண்களோடு கரைந்து போய் விட்டிருந்தாள் அம்மா. அப்புறம் ஒரு 'சின்ன டிபன்' சாப்பிட வேண்டியிருந்தது எங்களுக்கு. பட்டுத்துணி மாதிரி நுனி வாழை இலைகளில், இந்தப் பெண் பார்க்கும் சடங்குக்கென்றே கண்டுபிடிக்கப்பட்ட சொஜ்ஜி தான் முதலில் வந்து விழுந்தது. நான் திடுக்கிட்டேன். சொஜ்ஜி மாதிரி இனிப்பை ஒரு மனிதன் எவ்வளவுதான் தின்ன முடியும்? ஓர் இட்லி அளவுக்குத்தானே சொஜ்ஜி இருக்கும்? சோறு அளவுக்குக் குவியலாக என் இலையில் வைக்கப்பட்டது. இனிப்பும் நெய்யும் அளவற்று வழிந்தது. நாயுடு, அமுதம், அமுதம், என்று அதைப் புகழ்ந்துகொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தார். எனக்கு இரண்டு மூன்று விள்ளலுக்கு மேல் இறங்கவில்லை. திகட்டியது.

'என்ன... மாப்பிள்ளை சொஜ்ஜியை வச்சிட்டு அழகு பாக்கறாரா!' என்றார் நாயுடு.

'இலையில எதையும் மிச்சம் வைக்கப்படாது. சாப்ட்டுடு... எவ்வளவு நெய்... சர்க்கரை! அத்தோடு இது மாதிரி அசல் நெய் பலகாரம் நம்ம ஊர்ல காசு செலவு பண்ணினாலும் கிடைக்காதே...' என்று நாயுடு மேலும் விசிறி விட்டார்.

'இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு நல்லது கெட்டது ஏது?' என்றார் அப்பா. எனக்கு சொஜ்ஜி தொண்டையை விட்டு இறங்க மறுத்தது. ஒரு விள்ளல் சொஜ்ஜியும், ஒரு மிடறு தண்ணீருமாகக் கொஞ்சம் தின்று தீர்த்தேன். அப்புறம் நாய்த்தோல் பந்து அளவுக்கு போண்டா வந்தது.

அப்பா பெண்ணைப் பெற்றவரிடம் சொன்னார்:

'நான் ஒரு காந்தியவாதிங்க... எனக்குப் பொய் பேசத் தெரியாது. என் பிள்ளை என்கிறதற்காக இவன் இந்திரன் சந்திரன்னு நான் செல்ல மாட்டேன். ரொம்ப உசத்தியான பள்ளிக் கூடத்துலதான் இவன நான் சேர்த்தேன். டியூஷன் வச்சேன். என்ன செலவு என்கிறீங்க? ஆனா இந்தப் பய, எஸ்.எஸ்.எல்.சி.யைத் தாண்டி வர்றதுக்கே மூணு வருஷம் ஆயிடுச்சுங்க. அப்புறம் கைத்தொழில் ஒன்று கத்துக்கட்டும்னு ஒரு மோட்டார் ஒர்க்ஷாப்ல கொண்டு போய்விட்டேன். முதலாளி ஏதோ சொன்னான்னு அவனை அடிச்சிட்டு வீட்டுக்கு வந்துட்டான்! ரொம்ப முசுடு; ரொம்ப முன்கோபி; பொறுப்பில்லாத பய, வேலை வெட்டின்னு ஒண்ணும் அமையல. அவனுக்குப் பொண்ணு தர்றீங்கன்னா, அது என் முகம் பார்த்து — என் மரியாதைக்குத்தான் தரணும்... அவனுக்கு சோறு போட நான் எப்படி கடமைப்பட்டவனோ, அது மாதிரி அவன் பொண்டாட்டிக்கும் சோறு போட நான் கடமைப்பட்டவங்க, நான் உண்மையைத் தாங்க பேசுவேன். காந்தி எங்க ஊரு பக்கம் வந்த போது, அவரு பக்கத்துல நின்று பாத்து, அவரோட நாலு வார்த்தை பேசக் கொடுத்து வச்சங்க நானு! என் வாயில பொய் வராது.'

'அண்ணான்னா காந்திக்கு ரொம்ப உசுருங்க!' என்று நாயுடு பெண்ணின் தகப்பனாரைப் பார்த்துச் சொன்னார். அவர் ஆச்சரியத்தோடு தலையை அசைத்து அதை அங்கீகரித்துவிட்டு, என்னைப் பார்த்தார்.

அவமானத்தால் என் பாதி உயிர் ஏற்கெனவே போய் விட்டிருந்தது. அப்படியே எழுந்து ஓடலாமா என்றுகூட எனக்குத் தோன்றியது! தரை அப்படியே பிளந்து சீதையை வாங்கிக் கொண்ட மாதிரி என்னை வாங்கிக் கொள்ளாதா என்று இருந்தது.

பெண்ணின் அப்பா என்னை மறுபடியும் பார்த்து விட்டு, பிறகு அப்பாவின் பக்கம் திரும்பி, 'மாப்பிள்ளை பொண்ணைப் பாக்கட்டுங்க. அவருக்கும் பிடிச்சிருந்து, உங்களுக்கும் பிடிச்சிருந்தா மேல பேசுவோம். சின்ன வயசுப் புள்ளைங்க இப்படித்தான் ஏடாகூடமா எதனா பண்ணும். என்னையே எடுத்துக்குங்க. நானே கல்யாணத்துக்கு முன்னால, ரௌடிப்பய மாதிரி, மைனர் கணக்கா திரிஞ்சவங்க. எனக்குன்னு குடும்பம், பொண்டாட்டி, புள்ளைன்னு ஏற்பட்டதும் தான் திருந்தி வந்தேன். இப்போ மாப்பிள்ளை சண்டியரா இருந்தா என்ன? போவப் போவ சரியாயிடுவாரு..." என்று விட்டு என்னைப் பார்த்தார்.

தரையில் ஓர் எறும்பு, ஏதோ இரையை இழுத்துக் கொண்டு போவதைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்தேன். எல்லார் மனத்திலும் நான் ஒரு சண்டியராக, ரௌடியாக, வீட்டுக்கு அடங்காதவனாகத் தோற்றம் தந்தேன். பெண்கள் பீதியோடு என்னைப் பார்ப்பதை என்னால் உணர முடிந்தது.

நாயுடுவின் குரல் மௌனத்தை உடைத்தது, 'நட்ராஜா! பொண்ணு வருது பாத்துக்கோ, அப்புறம் அது சொத்தை, இது சொள்ளைன்னு எங்களைக் குத்தம் சொல்லக்கூடாது' என்றார், என்னைப் பார்த்து நாயுடு. பெண் என்று சொல்லப்பட்டவள் என் முன் வெற்றிலைத் தட்டை வைத்துவிட்டு நின்றாள்.

தலையைக் கவிந்து கொண்டு, வேர்த்து விறுவிறுத்துப் போய், மடங்கி வளைந்து நின்றிருந்தாள். எனக்குப் பேயறைந்தது மாதிரி இருந்தது. அடுக்கி வைக்கப்பட்டிந்த அரிசி மூட்டைக்குப் பாவாடை கட்டியது மாதிரி இருந்தாள் அவள். பக்கத்தில் இருந்த தூண் மறைந்து போய் இருந்தது. அவளுக்குப் பக்கத்தில் நான் நின்றிருந்தேன் என்றால், வயசான புளிய மரத்துக்குப் பக்கத்தில் வாழைக் கன்றை நட்டதுபோல் இருந்திருக்கும்.

நாங்கள் பஸ் — ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தோம். அம்மா சொன்னாள் மூன்றாம் முறையாக — 'அந்த வீட்டுப் பெண்டுங்க வைரத்தையே பார்த்தவளுங்க இல்லைபோல இருக்கு. என் மூக்குத்தியும் கம்மலும் எங்க வாங்கனது, என்ன விலை என்னமா பண்றதுன்னு கேட்டுத் தொளைச்சுப்புட்டாளுங்க!' என்றாள். அப்பா நாயுடுவிடம், 'அவ்வளவு பெரிய பணக்காரன். என் முன்னால் நாய் மாரி வாலை ஆட்டிக்கிட்டு நின்னான். பாத்தியா? என்ன இருந்தாலும் கிராமத்து ஜனங்களுக்கே மரியாதை

ஜாஸ்தி!' என்றார். அப்பாவை இந்த நேரத்தில் ஆயிரம் ரூபா கைமாற்றுக் கேளுங்கள் — இனாமாகவே கெடுப்பார். அவ்வளவு சந்தோஷத்தில் இருந்தார்.

நாயுடு சொன்னார்: 'அண்ணா! வந்ததே வந்தோம், இந்தப் பக்கத்துல தான் நம்ம நல்லசிவக் கௌண்டர் இருக்கார். அவர் வீட்டுல ஒரு பொண்ணு இருக்கு. நான் பார்த்திருக்கேனே... கிளின்னா கிளி பச்சைக்கிளி மாதிரி இருப்பா! சும்மா வெட வெடன்னு காத்துல அசையுற கொடி மாதிரி, காமாட்சி அம்மன் விளக்கு மாதிரி திருதிருன்னு இருக்கும். ஒருநடை போயிட்டு வந்துடுவோம்.'

'ஆகா... வந்ததே வந்துட்டோம். நாலு இடம் பார்ப்போம். நாலை பாத்தாத்தான் நல்லது ஒண்ணு தகையும். அதோடு, நேரமும் இருக்குதானே...' என்றார் அப்பா.

பேருந்தில் ஏறி உட்கார்ந்தபோது அம்மா சொன்னாள்:

'பொண்ணுதான் கொஞ்சம் பூசின மாதிரி இருக்கு. ஆனா நல்ல களை...'

'அதனால என்ன? ஒண்ணு ரெண்டு குழந்தை பெத்தாள்னா உடம்பு சுக்காயிடாதா? நூறு பவுன் போட்டு, கல்யாணம் பண்ணி வச்சு, ஐம்பது வேலி எழுதி வக்கிறேங்கறான்... இன்னிய தேதியில என்ன பெறும்...' என்று மனசுக்குள் கணக்குப் போடத் தொடங்கினார் காந்தியவாதியான அப்பா.

நாயுடு சொன்னார்: 'இது என்ன அண்ணி, உடம்பு? இதைவிட அண்டாவும் குண்டாவுமா இருந்த பொண்ணுங்கல்லாம் கல்யாணத் துக்குப் பிறவு காத்தாடி மாதிரி சிக்குன்ன ஆயினதை நாம் பாக்கலையா? இடம் பெரிய இடம். சௌகரியமா வச்சிருக்காங்க. வேலை வெட்டி இல்லாம சாப்பிடறது, தூங்கறதுன்னா உடம்பு இப்படித்தான் இலவமரம் மாதிரி ஊதிப் போயிடும். நம்ம வீட்டுப் பொண்ணா வந்துட்டா, அண்ணி, என்ன மாதிரி ஓட்டை உடைசல் பாத்திரமானாலும் தட்டி ஒடுக்கி எடுத்துடாதா!'

'அது உள்ளது' என்றார் அப்பா.

பள்ளிக்கூடம் விடும் நேரமாய்ப் போய்ச் சேர்ந்தோம் போலிருக்கிறது... எங்களுக்குப் பின்னால் பள்ளிக்கூடம் விட்டு வரும் ஒரு சிறுமிகளின் கூட்டமே வந்து கொண்டிருந்தது. என்ன மாதிரி இவர்களுக்கு மூக்கு வியர்க்கிறது. நான் பெண் பார்க்க வந்தி

ருக்கிறேன் என்பதை என் முகத்தில் எழுதி ஒட்டியிருந்த மாதிரி புரிந்துகொண்டு, பெண் ஒருத்தி என் பின்னால் இருந்து குரல் எழுப்பினாள்.

'மாப்பிள்ளை... மாப்பிள்ளை!'

'மண்ணாங்கட்டி மாப்பிள்ளை!' என்று ஒரு பெண் சொல்லவும், உடனே இன்னொரு பெண் அடுத்த அடி எடுத்தாள்:

'காலிருக்கு கையிருக்கு

வாலு எங்க தெரியல்லே...'

பத்து ஜலதரங்கங்கள் வாசித்தது மாதிரி கூழாங்கல்லைக் கொட்டியது மாதிரி சிரிப்பலை ஒன்று எழுந்து பரவியது. அம்மாவுக்குச் சிரிப்பு சிரிப்பாய் வந்தது. அப்பா சொன்னார்:

'இந்தக் கிராமத்து சனங்க ரொம்ப உண்மையை பேசறவங்க தெரியுமா நாயுடு? மனசுல பட்டதை வார்த்தையில கொட்டிட றாங்க. பாரு இந்த குட்டிகளை... என்னமா பொழியறது பாட்டை!' என்று வியந்தார் அப்பா.

ஒரு காரை வீட்டுக்குள் நுழைந்தோம். எங்களோடயே ஒரு சிறுமியும் நுழைந்தாள். பாவாடை, சட்டை ஒரு ஜாண் அளவே இருக்கும் எலிவால் சடை... பெண்ணுக்குத் தங்கையாய் இருப்பாள் என்று நினைத்துக் கொண்டேன்.

நாங்கள் திடீரென்று பெண் பார்க்க வந்தது அவர்கள் வீட்டில் ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. உடனே அவர்கள் அதற்குத் தயார் ஆனார்கள். பெண்ணுக்குத் தந்தை சைக்கிளில் வந்து இறங்கினார். வந்ததில் அவருக்கு இறைத்தது 'சொல்லிட்டு வரப் படாதா... விருந்து ஏற்பாடு பண்ணி இருப்பேனே' என்று உபசரித்தார். அப்புறம், 'இந்த மாதிரி பெண் இருக்கிற இடத்துக்கு திடீர்னு போறது தான் நல்லது' என்று அவரே சொல்லிக் கொண்டார். காப்பி என்கிற பெயரில் ஒரு பானம் வந்தது. சுமார் நாலு தம்ளர்கள் கொள்ளும் ஒரு லோட்டாவில் எங்களுக்குக் கருப்பட்டிக் காப்பி கொடுத்தார்கள். சிரமப்பட்டுக் குடித்தேன்.

'பெண்ணை அலங்காரம் பண்ணிக் கிட்டிருக்காங்க. வந்துடும்' என்று சொல்லப்பட்டது.

நான் இன்னொரு பச்சைக்கிளியை எதிர்பார்த்துக் கொண்டி ருந்தேன். அப்பா, அந்தப் பெண்ணின் தந்தையைப் பார்த்து,

ஆரம்பித்தார்: 'நான் காந்தியவாதிங்க... பொய் பேச மாட்டேன்... என் பையன் இந்திரன் சந்திரன்னு...'

அப்பா இன்னொருமுறை கழுவேற்றினார். நான் இரண்டாம் முறையாக அகலிகை ஆகி கல்லாய்ச் சமைந்தேன். பெண்ணின் தந்தை அடிக்கடி என் பக்கம் திரும்பி, 'அட படுவா... ராஸ்கல்... பொறுப்பற்ற பயலே... தெண்டத் தீனியே... உருப்படாத பயலே...' என்று கண்ணாலேயே சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்புறம் கிளி என் முன்னால் நிறுத்தப்பட்டது. நான் திடுக்கிட்டேன். நாங்கள் வீட்டுக்குள் வரும்போது எங்களுடன் நுழைந்த அதே சிறுமிதான் அவள். சட்டை போட்டுக் கொண்டிருந்த குழந்தைகளுக்குப் புடவை சுற்றி என் முன் நிறுத்தியிருந்தார்கள். அவசரம் அவசரமாக முகத்தில் பூசப்பட்ட பவுடர் வியர்வையில் திட்டுத் திட்டாய்த் தெரிந்தது. அதே எலிவால் ஜாடை. பள்ளிக்கூட வாசனையைக் கூட இன்னும் கழுவிக்கொள்ளவில்லை அவள். அந்தக் குழந்தையைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது...

நாங்கள் மீண்டும் எங்கள் ஊருக்குப் போகும் பேருந்தில் இருந்தோம். அப்பா சொன்னார்: 'பொண்ணு குழந்தை மாதிரி இருக்கா. மத்தபடி ரொம்பக் களை...'

'அதனால என்ன அண்ணா... அண்ணி கைல சாப்பிட்டுச் சுன்னா நாலுமாசத்துல பொண்ணு உருண்டு திரண்டிடுவாள்...' என்றார் நாயுடு. தொடர்ந்து 'அண்ணி கைராசி அப்படி ஆச்சே!' என்றார்.

'அது உள்ளது' என்றார் அப்பா.

'இன்னும் நாலு இடம் பார்ப்போம். அவனுக்கு எவ எங்கே பொறந்திருந்தாளோ. தேடினாத்தானே கிடைக்கும்' என்றாள் அம்மா.

அப்பா என்னைப் பார்த்தார். நான் சொன்னேன்:

'அப்பா, அந்த ஐம்பது வேலி நிலத்தையும் கல்யாணத்தும் போதே எழுதிக் குத்துடுவாங்களா...?'

அப்பா என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

1986